வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் பேராசிரியர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசுகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. சி.ஞானசேகரன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஆர்.பி.ரமேஷ், மாநகர துணைச் செயலாளர் முன்னா ஷெரீப், பகுதிச் செயலாளர்கள் ஆர்.இ.பி. சதிஷ்குமார், எம்.ஏ. கணேஷ்சங்கர், எஸ்.தயாள்ராஜ், வி.ஜி.கே.சுந்தர விஜி, ஆர்.சத்தியமூர்த்தி, பாலமுரளி கிருஷ்ணா, சி.எம். தங்கதுரை, பி.முருக பெருமாள், ஒன்றியச் செயலாளர்கள் சி.எல்.ஞானசேகரன்,பி.வெங்கடேசன், குமார பாண்டியன், கஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் மா.ப.அன்புநிதி, மணிமாறன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தேவராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.எம்.டி.பாலாஜி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழக மீனவர்கள் 14 பேர் இலங்கைப் படையினரால் கைது!

தூதரக வழிமுறைகளை பயன்படுத்தி கைதானவர்களை விடுவித்திட நடவடிக்கை எடுப்பீர்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, மார்ச் 8

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி யும் இந்திய மீனவர்கள் மேலும் கைது செய்யப்படுவதை தடுத்திடுவதற்கு தேவையான அனைத்து தூதரக வழிமுறைகளையும் மேற்கொள்ள வலியுறுத்தியும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 14 மீனவர்களை 6.3.2025 அன்று அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் மேலும் கைது செய்யப்படுவதைத் தடுத்திட உடனடி தூதரக நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (7.3.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 6.3.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற 14 தமிழக மீனவர்களை அவர்களது மீன்பிடி விசைப்படகுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ள மற்றுமொரு சம்பவம் குறித்து மிகுந்த வேதனையை வெளிப்படுத்தியுள்ள முதலமைச்சர் அவர்கள், 2025ஆம் ஆண்டில், கடந்த இரு மாதங்களில், இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் கைது செய்யப்படுவது இது ஒன்பதாவது முறை என்றும், இன்றைய நிலவரப்படி 227 மீன்பிடிப் படகுகளும், 107 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் பிடியில் உள்ளதையும் ஆழ்ந்த கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது, இலங்கையில் தமிழக மீனவர்கள் நீண்ட காலத்திற்கு சிறை வைக்கப்பட்டிருப்பதோடு, அவர்களை விடுவிக்க அதிகபட்ச அபராதத்தை விதிக்கத் தொடங்கியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், சிறைவாசம், அபராதம் மற்றும் இலங்கை சிறையில் இருக்கும் காலத்தில் ஏற்படும் வருமான இழப்பு போன்ற துன்பங்களுக்கும் அப்பால், அவர்களின் பொருளாதாரத்திற்கு உதவுக்கூடிய ஒரே ஆதாரமாக விளங்கும் அவர்களின் படகுகளையும் இலங்கை அரசு திருப்பித் தராததால், தமிழக மீனவர்கள் தற்போது தங்களது வாழ்வாதாரத்தில் பெரும் பொருளாதார இழப்பை எதிர்கொண்டுள்ளனர் எனத் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் மேலும் கைது செய்யப்படுவதை தடுத்திடுவதற்கு தேவையான அனைத்து தூதரக வழிமுறை களையும் பயன்படுத்திடுமாறும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை, தீவுத்திடலில் ரூ.113 கோடி மதிப்பீட்டில்

2 தளங்களுடன் நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய கண்காட்சி மையம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு!

சென்னை, மார்ச் 8-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2025) சென்னை, தீவுத்திடலில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 113 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரை தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் 1,63,039 சதுர அடி கட்டடப் பரப்பளவில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையத்தை உள்ளடக்கிய பொது சதுக்கப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னையின் முக்கிய அடையாளமாகிய நேப்பியர் பாலத்தின் அருகில் தீவுத்திடலில் சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையின் கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் 113 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையம் உள்ளடக்கிய பொது சதுக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இக்கண்காட்சி மையம், நமது பாரம்பரியமிக்க கட்டடக்கலை அமைப்புடன், 40 கண்காட்சி அரங்குகள், பொது நிகழ்ச்சி கூடங்கள், உணவகங்கள், 8 மின் தூக்கி வசதிகள், 148 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 148 இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான இட வசதிகள் மற்றும் 200 நவீன கழிப்பிட வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இக்கண்காட்சி மையம், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் நிரந்தரமையமாக அமைக்கப்படுவதால், அரசின் பல்வேறு துறைகளின் செலவினங்கள் குறைக்கப்படுவதுடன், மக்களுக்கு தேவையான, அனைத்து மேம்பட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், அரசு துறைகளின் கண்காட்சிகள், கருத்தரங்குகள், பண்பாட்டு நிகழ்ச்சிகள் போன்ற அனைத்து பொது நிகழ்ச்சிகளும் இம்மையத்தில் நடத்தப்படும்.

இந்த ஆய்வின்போது, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருத்தணி வட்டம் பீரகுப்பத்தில் நடந்த

சாலை விபத்தில் உயிரிழந்த 4 பேர் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 8

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பீரகுப்பம் மதுரா கே.ஜி.கண்டிகை கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பீரகுப்பம் மதுரா கே.ஜி.கண்டிகை கிராமத்தில் நேற்று (07.03.2025) பிற்பகல் 03.30 மணியளவில் திருத்தணியில் இருந்து சோளிங்கர் நோக்கிச் சென்ற டிப்பர் லாரியும், ஆர்.கே.பேட்டையில் இருந்து திருத்தணி நோக்கிச் சென்ற அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிய விபத்தில் பேருந்தில் பயணம் செய்த திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை வட்டம், அம்மையார்குப்பத்தைச் சேர்ந்த பாண்டுரங்கன் (வயது 60), த/பெ. சுப்பிரமணி, சிவானந்தம் (வயது 53), த/பெ.சண்முகம், மகேஷ் (வயது 40), த/பெ.கண்ணியப்பன் மற்றும் முரளி (வயது 38), த/பெ.பெரியசாமி ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து திருத்தணி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் 28 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 9

ம.அ.9.ந.க.எண்.இ1/02104/2024 **இரண்டு உறை மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

மண்டல அலுவலர், மண்டலம் - 9 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் - 9, பகுதி - 25 வார்டு - 123 - சி.பி. இராமசாமி சாலையில் அமைந்துள்ள சுகாதார மைய கட்டடத்தை (Early intervention centre) இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மாற்றி அமைக்க சுகாதார மைய கட்டடத்தை மேம்படுத்தும் பணி	
பணியின் தோராய மதிப்பு ரூ.79.04 இலட்சங்கள் முன் வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%	
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **20.03.2025 அன்று மாலை 3.00 மணி வரை**	
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **21.03.2025 அன்று மாலை 3.30 மணி**	
மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.	
செ.ம.தொ.இ / 934 / ஒப்பந்தப்புள்ளி / 2025	**மண்டல அலுவலர், மண்டலம் - 9**

'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!

மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஐ.சி.எப்.வ. முரளிதரன் தலைமை!

கொளத்தூர் தொகுதியில் முதல்வரின் மனிதநேய விழா! பண்பாட்டு கலைத் திருவிழா!

மக்கள் நீதி மையம் நிறுவனத் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் சிறப்புயாற்றினார்!

சென்னை, மார்ச்.8-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக கொளத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 15, முதல்வரின் கலைக்களம் எனும் தலைப்பில் நமது பண்பாட்டு கலைகளை கொண்டாடும் கலைவிழா 7.03.2025 அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

மண்மனம் மாறாத கலைக் கொண்டாட்ட முதல் நிகழ்ச்சியை மக்கள் நீதிமையம் நிறுவன தலைவர் கலைஞானி கமல்ஹாசன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றி பண்பாட்டுக் கலைஞர்கள் முதலில் மார்த்தாண்டத்தை சார்ந்த ஜெட் கிங் களரி குழுக் கலைஞர்கள் வின்சென்ட் அவர்கள் தலைமையில் களரிப்பயட்டு கலையையும், திரு நெல்வேலி கருப்பசாமி கலைக்குழுவை சார்ந்த கலைஞர்கள் சுப்பையா அவர்கள் தலைமையில் எருது கட்டு மேளக் கலையையும், காரியப்பட்டியை சார்ந்த ராமர் தப்பாட்டக் குழு ராமர் அவர்கள் தலைமையில் தப்பாட்ட கலையையும், தூத்துக்குடியை சார்ந்த உவரிக்களியல் குழு கலைஞர்கள் அந்தோணிசாமி அவர்கள் தலைமையில் களியல் கலையையும், கலைவாணர் கலைக்குழு கலைஞர்கள் பூபதி ராஜா அவர்கள் தலைமையில் பெரு முரசு ஆட்டத்தையும், ஆந்தக்குடி இளைய ராஜாவின் இளைய கானா குழுவை சார்ந்த இளையராஜா கானா முத்து இசைவாணி ஆகியோர் இணைந்து கானா பாடல்களை பாடியும் கலைகளை நிகழ்த்தியும் தப்பாட்டம் கொட்டியும் மகிழ்வித்தது கண்டு இரசித்து மகிழ்ந்தார்.

மேலும் 25 சுயஉதவிக்குழுவினர் வழங்கிய 200 அறுசுவை உணவுகளோடு கூடிய உணவு விருந்தோம்பலை கழக துணைப் பொதுச்செயலாளர் திருமதி.கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் துவக்கி வைத்து பண்பாட்டு கலையை கண்டு இரசித்தார்.

இக்கலைவிழா நிகழ்ச்சிகளில் சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், சரிதா மகேஷ்குமார் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, தாவூத் பீ எம்.சி, மருத்துவர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டனர்.

மேலும், இப்பண்பாட்டு கலை நிகழ்ச்சியில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், மாவட்ட நிர்வாகிகள்: கோ. ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி. மண்டலக்குழு தலைவர்: பி.கே. மூர்த்தி எம்.சி, கூ.பி.ஜெயின் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி. பகுதி கழக செயலாளர்கள்: எ.நாகராசன் எம்.சி, சொ.வேலு, வி.சுதாகர், வே.வாசு, எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ்வேந்தன், எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி. ராஜகோபால், பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், அ.நிர்மலா தேவி. மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்; வானவில் விஜய், எம்.சி, எல்.பி.எப்மோகன், சுதாதீனதயாளன் எம்.சி, எம்.சி, துரைகண்ணன், எம். பெரோஸ்கான், ஜி.வி.நாகவள்ளி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்குகமது, து.ஆயிரம், ஆர்.எஸ்.சித்திக், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வடகிழக்கு செயலாளர் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாளை நடைபெறுகிறது! சி.ஸ்ரீதணி எம்.சி. தலைமை! சென்னை கிழக்கு மாவட்டம்

கொளத்தூர் தொகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - பண்பாட்டு கலை திருவிழா!

அமைச்சர் தங்கம் தென்னரசு - கனிமொழி கருணாநிதி எம்.பி. - ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சிறப்புரை! அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 8-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. கொளத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில், கழக தலைவர் 72-வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில், சி.ஸ்ரீதணி எம்.சி. தலைமையில் நடைபெறும் நமது பண்பாட்டுக் கலைகளை கொண்டாடும் மூன்றாம் நாள் நிகழ்ச்சியை- நிதி மற்றும் சுற்றுச்சூல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, தருமபுரி ஆதினம் 27வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் துவக்கி வைத்து சிறப்பிக்கின்றனர் என்று மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு -அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. கொளத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 15'ஆ' முதல்வரின் கலைக்களம் எனும் தலைப்பில் நமது பண்பாட்டு கலைகளை கொண்டாடும் கலைவிழா 9.03.2025 "ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, பெரம்பூர், டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

மண்மனம் மாறாத கலைக் கொண்டாட்டமான இந்நிகழ்ச்சியில் 500 தமிழ் கலைஞர்கள் பங்கேற்கும் மாபெரும் கலை விழாவும், மகளிர் 25 சுய உதவிக்குழுவினர் வழங்கும் 200 அறுசுவை உணவுகளோடு கூடிய விருந்தோம்பலும் முதல்வரின் கலைக்களமாகக் கோலாகலமாக 7, 8, 9 ஆகிய மூன்று நாட்கள் தொடர்ந்து கொண்டாடப்படுகிறது.

இக்கொண்டாட்டத்தின் மூன்றாம் நாள் நிகழ்ச்சியை நிதி மற்றும் சுற்றுச்சூல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, தருமபுரி ஆதினம் 27வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் துவக்கி வைத்து நிகழ்ச்சிகளை கண்டு மகிழ்கிறார்கள்.

இக்கலைவிழா நிகழ்ச்சிகளில் சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், சரிதா மகேஷ்குமார் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, தாவூத் பீ எம்.சி, மருத்துவர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்படுகிறார்கள்.

மேலும், முதல்வரின் கலைக்களம் நிகழ்ச்சியில் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.சி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், இரா.விடுதலை, பகுதி கழக செயலாளர்கள் : ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: கே.சந்துரு, சி.மகேஷ்குமார்.

மாவட்ட து.செயலாளர் தேவஜவகர் பொதுக்குழு உறுப்பினர்கள்: சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: துரைகண்ணன், அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், மாமன்ற உறுப்பினர்கள்: சி.ஸ்ரீதணி, என்.தாவூத் பீ.டி.யோகப்பிரியா, பி.அமுதா. கே.சாரதா. பகுதி நிர்வாகிகள் : பி.பழனி, இரா.இளங்கோவன், எஸ். கே.ரமேஷ், எல்.டி.தாமஸ். இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி.

வட்ட கழக செயலாளர்கள்: பா.அன்பரசு, டி.சந்திரசேகர், கே.ஜார்ஜ்குமார், என். பொன்முடி பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, பி.டி.சி. எஸ்.ரவி. எஸ்.முருகன், எம். பி.தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என். இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

செயற்கரிய செயலால் உயர்ந்த, தமிழ்நாட்டின் தவப்புதல்வருக்காக நடத்தப்படும் முதல்வரின் கலைக்களம் நிகழ்ச்சியில், சென்னை கிழக்கு மாவட்டதிற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாவட்ட/ பகுதி/ வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள். பகுதி வட்ட நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு பெருந்திரளாக வருகை தந்து முதல்வரின் பிறந்தநாளுக்கு பெருமை சேர்க்க வேண்டுகிறோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கேட்டுக் கொண்டுள்ளார்.